ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2505/97 - 2026 සැප්තැම්බර් මස 10 වැනි බුහස්පතින්දා - 2026.09.10

2505/97 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.-பி. 6/2001 (iv)

2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டம்

2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின் 78 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 105 ஆம் பிரிவின்கீழ், இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட விதிகள்.

தவிசாளர்,
இலங்கைக் காப்புறுதி
ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

கொழும்பு,
2026, செத்தெம்பர் 09.

விதிகள்

1. இவ்விதிகள் 2026 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காப்புறுதி முகவர்கள் தகைமைகள் விதிகள் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் வர்த்தமானியில் அது வெளியிடப்பட்டதன் மேல் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. பின்வரும் எவ்வாளொருவர் -

(அ) பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவராகவிருக்கின்றாரோ;

(ஆ) இலங்கையின் பிரசையொருவராகவிருக்கின்றாரோ;

(இ) பின்வரும் குறைந்தபட்ச தகைமைகளைப் பெற்றிருக்கின்றாரோ:-

(i) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஆறு பாடங்களில் சாதாரண சித்தி (s);

(ii) (அ) இப் பரீட்சை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சைக்கு சமமாக அல்லது அதனை விட உயர்வானதாகவிருக்கின்றதோ; அத்துடன்

(ஆ) ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்றதோ;

அவ்வேறேதேனும் பரீட்சையின் வெற்றிகரமான பூர்த்தி:

ஆயின், ஆணைக்குழுவானது விடயத்துக்கு விடயம் அடிப்படையில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சைக்கு சமமான அல்லது அதைவிட உயரிய வேறு தகைமைகளைத் தீர்மானித்தல் வேண்டும். பரீட்சையின் தரம் பற்றி பிரச்சினையொன்று எழுகின்றவிடத்து, அத்தகைய விடயம் பரீட்சைகள் ஆணையாளரினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்; அல்லது

(iii) 2002 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆம் திகதியிலிருந்து காப்புறுதி முகவரொருவராக ஐந்து வருடங்களுக்கு குறையாத அனுபவம்;

(ஈ) இலங்கைக் காப்புறுதி நிறுவகத்தினால் அல்லது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் உயர்தொழில்சார் குழுவினால் நடாத்தப்படும் முற்கூட்டிய ஆட்சேர்ப்புத் தேர்வில் சித்தியடைந்திருக்கின்றாரோ;

(உ) குற்றப்பணமொன்றுடன் மாத்திரம் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றைத் தவிர வேறு குற்றத் தவறொன்றுக்கு குற்றஞ்சாட்டப்படாதிருக்கின்றாரோ:

ஆயின், குற்றத்தீர்ப்பளிக்காதிருத்தலானது பொலிசுத் தடைநீக்கல் சான்றிதழொன்றினையும் மற்றும் சத்தியக்கட தாசியொன்றினையும் சமர்ப்பித்தலின் மூலம் எண்பிக்கப்படுதல் வேண்டும்;

(ஊ) காப்புறுதியாளரொருவர் அல்லது தரகரொருவரின் ஊழியரொருவராகவிராதிருக்கின்றாரோ; அத்துடன்

(எ) நிதிசார் கையாடல் அல்லது மோசடி ஏதுவின் மீது ஆணைக்குழுவினால் அல்லது காப்புறுதியாளரால் அல்லது காப்புறுதி தரகரால் காப்புறுதி முகவரொருவராக தனியாள், முடிவுறுத்தப்படாதிருக்கின்றாரோ,

அவ்வாளொருவர் காப்புறுதி முகவரொருவராக பதிவு செய்வதற்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

3. (1) பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி முகவரொருவர் ஒவ்வொரு மூன்று ஆண்டு காலப்பகுதியிலும் ஒருமுறை தொடர்ச்சியான உயர்தொழில்சார் விருத்தி பரீட்சையை வெற்றிகரமாக பூர்த்திசெய்தல் வேண்டும்.

(2) ஓராம் உபவிதியின்கீழ் தேவைப்படுத்தப்படும் முதலாவது பரீட்சை இவ்விதிகளின் வெளியீட்டுத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுகளினுள் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உபவிதியின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற காப்புறுதி முகவரொருவர் காப்புறுதியாளரொருவரின் அல்லது காப்புறுதி தரகரொருவரின் காப்புறுதி முகவரொருவராக பணியாற்றுதலைத் தொடர்வதற்கு தகுதியுடையவராகவிருத்தல் ஆகாது.

(4) ஓராம் உபவிதியில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள தொடர்ச்சியான உயர்தொழில்சார் விருத்தி பரீட்சையானது பின்வருவோரால் நடாத்தப்படுதல் வேண்டும்-

(அ) இலங்கைக் காப்புறுதி நிறுவகம்; அல்லது
(ஆ) இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் அங்கீரிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகம்.

4. விடயத்துக்கேற்றவாறாக, ஒவ்வொரு காப்புறுதியாளரும் அல்லது தரகரும் காப்புறுதி முகவர்களாக அத்தகைய காப்புறுதியாளருடன் அல்லது தரகருடன் பதிவு செய்யப்பட்டிருக்கின்ற எல்லா ஆட்களின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய தகவல்கள் உள்ளடங்கலாக இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

5. இரண்டாயிரத்து இரண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதிய 1255/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2002 ஆம் ஆண்டின் காப்புறுதி முகவர் தகைமை விதிகள் அதன்கீழ் சட்டமுறையாக ஆக்கப்பட்ட எவற்றுக்கும் பங்கமின்றி இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

6. இவ்விதிகளின் நோக்கங்களுக்காக -

"சட்டம்" என்பது, 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டம் எனப் பொருள்படும்;

"தரகர்", "காப்புறுதி முகவர்" அத்துடன் "காப்புறுதியாளர்" என்பன சட்டத்தில் அவற்றுக்குக் குறித்தளிக்கப்பட்டவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"ஆணைக்குழு" என்பது, 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு எனப் பொருள்படும்;

"பரீட்சைகள் ஆணையாளர்" என்பது, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள பரீட்சைகள் ஆணையாளர் எனப் பொருள்படும்; அத்துடன்

"இலங்கைக் காப்புறுதி நிறுவகம்" என்பது, காப்புறுதித் தொழிலிலுள்ள ஆட்களின் திறன்களையும் அறிவினையும் விருத்திசெய்தல் என்ற பிரதான குறிக்கோளுடனான இலாப நோக்கற்ற ஒழுங்கமைப்பொன்றாகவிருக்கின்ற மற்றும் 1982 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதி நிறுவகம் எனப் பொருள்படும்;

அட்டவணை

(விதி 4)

காப்புறுதி முகவர்களைப் பதிவுசெய்தல்

கம்பெனியின் பெயர் : (காப்புறுதிக் கம்பனி/காப்புறுதித் தரகர்)

இல.	முகவரின் முழுப்பெயர்	தேசிய அடையான அட்டை இல	பிறந்த திகதி (தி/மா/ஆ)	பால் (அண்/பெண்)	முகவரின் கோவை/பதிவு இல.	நியமனத் திகதி / கம்பெனியில் பதிவுத் திகதி	காப்புறுதி தொழிலின் வகுப்பு (நீண்ட காலம் / பொது/ நீண்ட காலம் மற்றும் பொது)	தொலைபேசி இலக்கம்		மின்னஞ்சல் முகவரி	முகவரி	
								நிலையானது	கையடக்கம்		நிரந்தரம்	தொடர்பு கொள்ளும் முகவரி
1												
2												
3												
4												
5												
6												
7												
8												
9												
10												
11												
12												
13												
14												

EOG 09- 0248